நாள்: 09.07.2025

O.S. No. 81/2022

**வா.சா.1**

**பெயர்: ராமதாஸ், த/பெ. சிவசுப்ரமணியம்**

**<u>3 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

தாவா சொத்தின் சர்வே எண் என்ன என்றால் 82/13 ஆகும். தாவா சொத்து யாருக்கு உரிமையுடையது என்றால் என் தகப்பனார் சிவசுப்ரமணியன் அவர்களுக்கு உரிமையுடையதாகும். தாவா சொத்துகளுக்கு வருவாய் ஆவணங்களை தவிர மூல ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வருவாய் கணக்குகள்படி தாவா சொத்துக்களுக்கு ஆதியில் ரெத்தினம்மாள் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்நீதிமன்றம் மூலம் வழக்கறிஞர் ஆணையர் நியமனம் செய்யப்பட்டு சர்வேயர் உதவியுடன் தாவா சொத்து அளவீடு செய்யப்பட்டது என்றால் சரிதான். அவ்வாறு அளவீடு செய்யும்போதும் தாவா சொத்து ரெத்தினம்மாள் பெயரில் பதிவு இருந்து வந்து பிறகு என் தகப்பனார் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டது விவரம் சொல்லப்பட்டது என்றால் சரிதான்.

தாவா சொத்தில் பிரதம மந்திரி திட்டத்தின் கீழ் வீடு கட்டுவதற்கான உரிய அனுமதி 3 முதல் 6 பிரதிவாதிகளால் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிக்கும் எனக்கும் இடையே உள்ள குடும்ப பிரச்சனை காரணமாக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, அதில் அரசு தரப்பு தேவையில்லாமல் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனவே வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

//மேற்படியார் தரப்பில் இன்றைய விசாரணையின்போது ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.//

MOHAMED BASIL S

Digitally signed by MOHAMED BASIL S
Date: 2025.07.08 16:34:27 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருவாரூர்.